DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 323/2025** | |
| Prosecution Witness | | | : | **PW - 4** | |
| Name | : | திரு. ராஜேஷ் | Occupation | : | காவல் ஆய்வாளர் |
| Father's Name/ Husband | : | அன்பழகன் | | | |
| Village | : | | Age | : | 45 |
| Taluk | : | சீர்காழி | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of July 2026.
27-07-2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.02**

**முதல் விசாரணை**

நான் தற்போது மயிலாடுதுறை மதுவிலக்கு அமல் பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16/01/2025 ஆம் தேதி 13.00 மணிக்கு நாச்சியார்கோவில் காவல் நிலைய ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது, நான் ரோந்து அலுவலாக நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் கணணன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்ரமணியன் ஆகியோருடன் குற்ற தடுப்பு சம்மந்தமாக கண்காணித்து , முருக்கங்குடி கடைத்தெருவிற்கு சென்ற போது , ரோட்டின் இருபக்கமும் ரோட்டில் சென்ற வாகனங்கள் நின்ற நிலையிலும், கடை தெரு பக்கமிருந்து பொது மக்கள் அலறியடித்துக்கொண்டு ரோட்டின் இருபக்கமும் ஓடிவருவதை பார்த்து, கடை தெருவிற்கு சென்று பார்த்த போது , ரோட்டின் நடுவே பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து பப்லு என்ற பிரசாத் வயது 29 த/பெ பாஸ்கர் மாரியம்மன் கோயில் தெரு , முருக்கங்குடி என்பவர் கையில் உயிருக்கு ஆபத்தையும் அபாயத்தையும் விளைவிக்கக்கூடிய ஒரு பெரிய நீண்ட அருவாளை வைத்து சுழற்றிக்கொண்டு ரோட்டின் இருபக்கமும் மாறி மாறி ஓடிக்கொண்டு குச்சிகாரி மகனே , தேவடியா மகனே என்று

எவனுக்காவது தில்லு இருந்தால் என்று சொல்லியும் என்னை தொட்டு பாருடா நான் பெரிய ரவுடிடா என் மேல பல கேசு எல்லாம் உண்டு என்று சொல்லி கையில் வைத்திருந்த பெரிய நீண்ட வீச்சரிவாளை தார்ரோட்டில் தீட்டிய போது, அதிலிருந்து வந்த தீப்பொறியை பார்த்து பொது மக்களும் , குழந்தைகளும் பயந்துக்கொண்டு ஓடினார்கள் . மக்களுக்கு பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியும், போக்குவரத்தை ஸ்தம்பிக்க வைத்தும் குற்ற செயலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவரை, பார்த்த கடைக்காரர்கள் எல்லாம் உயிருக்கு பயந்து , கடையின் கதவுகளை இழுத்து மூடினார்கள் . பக்கத்தில் நின்றவர்களை தடுக்க முற்பட்ட போது , மேற்கண்ட நபர் கையில் வைத்திருந்த நீண்ட அரிவாளை மீண்டும் சுழற்றி காண்பித்து , எவனாவது என் கிட்ட வந்தா உங்களை வெட்டி கொன்றுவிடுவேன் என்று கொலை மிரட்டில் செய்துக்கொண்டிருந்த நபர் , நிலைய சரித்த பதிவேட்டில் உள்ளவர் என்பதாலும் , அந்த நேரத்தில் அந்தயிடத்தில் நின்றுக்கொண்டு இருப்பதற்கான எந்த முகாந்திரமும் இல்லாததால் , கையில் நீண்ட அரிவாளை வைத்துக்கொண்டு நின்றவரை , காவலர்கள் உதவியுடன் சுற்றிவளைத்து பிடித்தும், மேற்கண்ட நபரை குற்ற காரணம் கூறி 13.15 மணிக்கு கைது செய்தும் , பின்னர் எதிரி தாமாக முன்வந்து கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தை தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் காவலர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் சுப்ரமணியன் மற்றும் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்ததாகவும் , பின்னர் எதிரி கையில் வைத்திருந்த அரிவாளை தாமாக முன்வந்து கொடுத்த அரிவாளை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து , அந்த கைப்பற்றுதல் 13.30 மணிக்கு மகஜரில் கைப்பற்றினேன். பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட தடயத்துடன் 15.30 மணிக்கு நிலையம் வந்து எதிரி மீது நாச்சியார்கோயில் காவல் நிலைய குற்ற எண் 29/2025 ச/பி 296(பி) பிஎன்எஸ் உ/இ 25(1A) Arms

Act இன் கீழ் வழக்கு பதிவு செய்தேன் . அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 4.** பின்னர் எதிரியை திரேக பரிசோதனை செய்து , காவல் அடைப்பிற்காக நிலைய பாரா வசம் ஒப்படைத்தேன். அசல் முதல் தகவல் அறிக்கையுடன் கைப்பற்றுதல் மகஜர் நகலை இணைத்து கும்பகோணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் –2 ற்கு அனுப்பினேன் . இதர நகல்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் , ஒரு நகலை காவல் நிலையத்தில் வைத்தேன் . பின்னர் சம்பவயிடத்திற்கு 16.30 மணிக்கு சென்று, சம்பவயிடத்தை பார்வையிட்டு, சாட்சிகள் லூர்துராஜ், வெங்கடேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு , பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் . அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5.** பின்னர் பார்வை மகஜரில் சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்று தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன் . மேற்படி சம்பவம் உண்மையென தெரியவந்ததால், புலன் விசாரணையை முடித்து எதிரி மீது 23/01/2025 அன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**.

இந்த வழக்கு தமிழர் திருநாளான பொங்கல் அன்று எதிரி மீது பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் . தனி நபர் புகார் இல்லை என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று ரோந்திற்கு எத்தனை நபர்கள் , யார் யார் என்றால் சென்றோம் என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் கண்ணன் , சுப்ரமணியன், நான் மற்றும் எனது ஓட்டுநருடன் ரோந்திற்கு மொத்தம் 4 பேர்கள் சென்றோம் . அந்த ஓட்டுநரும் காவலர் என்றால் சரிதான் . அந்த ஓட்டுநர் பெயர் என்ன என்றால் அய்யப்பன். ஓட்டுநர் அய்யப்பனை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்தேனா என்றால் இல்லை . சம்பவம் நடந்ததாக நான் சொல்லிக்கூடிய பகுதி மக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதி என்றாலும் , கடைகள் அதிகமாக உள்ள பகுதி என்றாலும் ,

வாகனங்கள் அதிகமாக சென்றுவரக்கூடிய பகுதி என்றாலும் சரிதான் . சம்பவம் நடந்ததாக நான் சொல்லிக்கூடிய பகுதியில் உள்ள பொது மக்களையோ, கடைகளின் உரிமையார்களையோ , நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான் . நான் அவர்களை அழைத்து அவர்கள் யாரும் முன்வரவில்லை. இந்த வழக்கானது தமிழர் திருநாளான பொங்கல் காலக்கட்டத்தில், புள்ளியல் கணக்கிற்காக எதிரிக்கு எதிராக நான் ஒரு பொய்யாக வழக்கை பதிவு செய்து , சம்பவயிடம் செல்லாமல், சாட்சிகள் எவரையும் விசாரணை செய்யாமல் , அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார்செய்து , வழக்கிற்கு ஏற்றவாறு நான் எந்தவித புலன் விசாரணையையும் செய்யாமல் தவறான குற்ற இறுதியறிக்கை எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முன் விசாரணையில் சொன்ன அனைத்து விவரங்களும் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல . நான் சொன்னது போல் , இந்த வழக்கினுடைய எதிரி எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 12.28**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.